# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்ட பீடம்

## சட்டமாணி சிறப்புப் பட்டக்கற்கை
## முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை, வருடம் III- 2025

## LAW31210 - மாற்று பிணக்குத் தீர்வுச் சட்டம்
(2 ¼ மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

எவையேனும் **இரண்டு (02)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. வளர்ந்து வரும் நாடான சோமியா என்ற குடியரசு, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக எல்லை தாண்டிய வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ள புதியதொரு அரசாங்கத்தை சமீபத்தில் தேர்ந்தெடுத்துள்ளது. இருப்பினும், நாட்டின் நீதித்துறையின் நிலுவையில் உள்ள வழக்குகளின் அதிகரிப்பு வணிக பிணக்குகளைத் தீர்ப்பதில் நீண்ட தாமதங்களுக்கு வழிவகுக்கின்றது. இந்நிலைமை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையைத் தடுக்கலாம், வர்த்தக பேச்சுவார்த்தைகளை காலதாமதமாக்கலாம் மற்றும் சர்வதேச பரிவர்த்தனைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வியாபாரங்களுக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கலாம். இந்த சவால்களை கவனத்திற்கொண்டு, வணிக மத்தியஸ்தத்தில் (commercial mediation) குறிப்பாக கவனம் செலுத்தி, மாற்று பிணக்குத் தீர்வு வழிமுறைகளை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

   சோமியாவின் அரசாங்கம் உம்மை ஆராய்ச்சியாளரொருவராக நியமித்துள்ளது என்று கருதி சோமியாவின் சூழலில் எல்லை தாண்டிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வணிக மத்தியஸ்தத்தின் பொருத்தத்தையும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க சோமியாவுக்கு சர்வதேச சிறந்த நடைமுறைகளை எவ்வாறு உள்வாங்கலாம் என்பதையும் கோடிட்டுக் காட்டும் அறிக்கையொன்றைத் தயாரிக்க. உமது விடையை தொடர்புடைய அதிகாரங்களால் ஆதரிக்க.

   சோமியாவின் சட்ட முறைமை இலங்கையின் சட்ட முறைமையைப் போன்றது எனக் கருதுக.

   (30 புள்ளிகள்)

2. சட்டத் தொழிலில் பேச்சுவார்த்தை என்பது முக்கிய திறமையொன்றாகும், இது தரப்பினர்கள் விலையுயர்ந்த மற்றும் நேரத்தை செலவிடும் வழக்குகளை நாடாமல் பிணக்குகளை இணக்கமாக தீர்க்க உதவுகிறது. இருப்பினும், பேச்சுவார்த்தை அதிகார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சாத்தியமான நெறிமுறை சிக்கல்கள் போன்ற சவால்களையும் முன்வைக்கிறது, அவை விமர்சன ரீதியாக ஆராயப்பட வேண்டியவை.

   மேற்கூறிய கூற்றினை தொடர்புறுத்தி சட்ட சூழலில் பிணக்குத் தீர்வின் அடிப்படையொன்றாக பேச்சுவார்த்தையின் (negotiation) வகிபங்கினை விமர்சன ரீதியாக ஆராய்க.

   (30 புள்ளிகள்)

3. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான Delta PLC மற்றும் இந்தியாவில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான Meta Ltd ஆகியன கொழும்பில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த உல்லாச இடமொன்றை "Nation of Dreams" என்ற பெயரில் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்காக முகாமைத்துவ ஒப்பந்தத்தைமொன்றை (Management Agreement (MA)) மேற்கொண்டன. MA இன்படி, Meta Ltd ஆனது Delta PLC மற்றும் மேலும் நான்கு துணை நிறுவனங்களுக்கும் முகாமைத்துவ சேவைகளை வழங்க இருந்தது. MA மற்றும் அதைத் தொடர்ந்து செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக, Meta Ltd நிர்வாகத்தின் முழு கட்டுப்பாட்டையும் பெற்றது. நிதி சிக்கல்கள் மற்றும் Delta PLC நிறுவனத்தில் உள்ள இயக்குநர்களின் தவறான நடத்தை என்பன Meta Ltd வணிக நடவடிக்கையின் முழு கட்டுப்பாட்டையும் பெறுவதற்கு பங்களித்தது. இருப்பினும், Meta Ltd இன் நடத்தை ஆரம்ப முகாமைத்துவ ஒப்பந்தத்தை மீறுவதற்கு வழிவகுத்தது என்று Delta PLC கருதியது. இந்த ஒப்பந்தத்தின் பிரிவு 15, "இவ்ஒப்பந்தத்திலிருந்து எழும் எந்தவொரு பிணக்கும் கொழும்பில் உள்ள சர்வதேச ADR மையத்திற்கு (International ADR Centre) நடுத்தீர்ப்புக்காக பரிந்துரைக்கப்படும், அதன் முடிவு பிணிக்கத்தக்கதாகவும் இறுதியானதாகவும் இருக்கும்" என்று ஏற்பாடு செய்கிறது. ஒப்பந்த மீறலை எடுத்துக்காட்டும் வகையில், Delta PLC, Meta Ltd மீது நடுத்தீர்ப்பு (arbitration) அறிவிப்பை வழங்கியது. இலங்கையில் உள்ள அரசியல் கட்சியொன்று, மேற்கூறிய வணிக நடவடிக்கையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததால், Delta PLC முகாமைத்துவ ஒப்பந்தத்தில் நுழைய மோசடியாகத் தூண்டியதால், கேள்விக்குரிய பிணக்கு செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் கீழ் எழவில்லை என்ற நிலைப்பாட்டை Meta Ltd எடுத்தது. அதைத் தொடர்ந்து, இரு தரப்பினரும் நடுவர்களை நியமித்தனர், மேலும் நடுவர் மன்று அமைக்கப்பட்டது. நிலைமையை மேலும் மோசமாக்கும் என Delta PLC இலங்கையைச் சேர்ந்த விநியோகத்தர்களுடன் மேலும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதைத் தடுக்க Meta Ltd விரும்பியது. எனவே, இது தொடர்பாக Delta PLC இற்கு எதிராக உத்தரவைப் பெற Meta Ltd ஆனது நடுவர் மன்றில் விண்ணப்பித்தது. நடுவர் மன்றத்தின் தலைவர் விண்ணப்பத்தை நிராகரித்தார். நடுவர் மன்று தனக்கு அதிகார நியாயாதிக்கம் இருப்பதாக தீர்ப்பளித்ததோடு Delta PLC இற்கு கணிசமான நட்டஈடுகளையும் வழங்கியது. இருப்பினும், Meta Ltd. இறுதி முடிவில் திருப்தி அடையவில்லை மற்றும் தீர்ப்பளிப்பை சவாலுக்குற்படுத்த விரும்புகிறது.

   மேற்கூறிய சூழ்நிலையில் எழும் சட்ட சிக்கல்களை ஆராய்ந்து, தரப்பினருக்கு ஆலோசனை கூறுக. உமது விடையை பொருத்தமான ஆதாரங்களால் ஆதாரப்படுத்துக.

   (30 புள்ளிகள்)

4. மாற்று தகராறு தீர்வு (ADR) சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இது தொழில்நுட்ப முன்னேற்றங்கள், உலகமயமாக்கல் மற்றும் வளர்ந்து வரும் சமூகத் தேவைகள் ஆகியவற்றால் இயக்கப்படுகிறது. மத்தியஸ்தம் மற்றும் நடுத்தீர்ப்பு போன்ற பாரம்பரிய முறைகள் இப்போது நிகல்நிழை தகராறு தீர்வு (Online Dispute Resolution (ODR)) மற்றும் கலப்பின வழிமுறைகள் (hybrid) போன்ற புதுமையான அணுகுமுறைகளால் பூர்த்திசெய்யப்படுகின்றன, அவை அதிக நெகிழ்வுத்தன்மை மற்றும் அணுகலை வழங்குகின்றன. இந்த பரிணாம வளர்ச்சி போக்குகள், குறிப்பாக கலாசார, தொழில்நுட்ப மற்றும் நிறுவன காரணிகள் முக்கிய பங்கு வகிக்கும் இலங்கை சட்ட சூழலுக்கு ஏற்ப நீதிக்கான அணுகலை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றிய முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது.

மேற்கண்ட கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. பொருத்தமான இடங்களில் பொருத்தமான சட்டங்கள், வழக்குச் சட்டம் மற்றும் ஒப்பீட்டு எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துக.

(30 புள்ளிகள்)

************